மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதை விரிவுபடுத்துகின்ற எந்த ஒரு திட்டமும் இப்பொழுது பரிசீலனையில் இல்லை. காசநோய் தடுப்புத் திட்டம் தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் பல்வேறு அமைப்புகளின் மூலமாக இயங்கிக் கொண்டு வருகிறது. காசநோய் தடுப்பு எல்லா மாவட்ட மருத்துவ மனைகளிலும் கவனிக்கப்பட்டு வருகின்ற காரணத்தால், இந்த மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டிய அவசியமில்லை என்று அரசு உணர்கிறது.

Leprosy

* 86. *Q.*—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that alarming incidence of leprosy is prevalent among students in Secondary Schools in North Arcot district; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in this matter?

தொழுநோய்.

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள இடைநிலைப் பள்ளி மாணவர்களிடையே தொழு நோய் அஞ்சத்தக்க அளவில் அதிகமாகக் காணப்படுவது உண்மையா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் பொதுவாக 1.6 சதவீதம் பள்ளி செல்லும் வயதுடைய சிறுவர்கள் தொழுநோயால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ) கிராமப்புறங்களில் பள்ளி சென்றாலும் செல்லா விட்டாலும் தொழுநோயால் பீடிக்கப்பட்ட சிறுவர்களுக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1972 ஆகஸ்ட் 19]

தொழுநோய்த் தடுப்பு இயக்கம் இருக்கும் இடங்களில், அவர்களுடைய வீட்டிற்கு அருகாமையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அப்படி அவர்கள் வந்து சிகிச்சை பெருவிட்டால் இதற்கென நியமிக்கப்பட்ட மருத்துவ பணியாளர்கள் அவர்களுடைய வீட்டிற்கே சென்று சிகிச்சை அளிக்கிருர்கள்.

திரு. எம். ராஜா அய்யர் . தலைவர் அவர்களே, பள்ளிமாணவர்களுக்கு கட்டாயமாக ஏதாவது மருத்துவப் பரிசோதனை ஏற்பாடு செய்து, இம்மாதிரியான நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர் என்று கண்டறிந்து, அவர்களுக்குத் தனியாகச் சிகிச்சை அளிக்கத் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எந்தப் பகுதியில் மாணவர்கள் அதிகமாகத் தொழு நோயால் பாதிக்கப்பட்டிருக்கிருர்களோ, அந்தப் பகுதியில் சிகிச்சை வழங்க தொழு நோய் பரிசோதனை நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிருர்கள். ஒரு பொதுவான திட்டத்தின் கீழ் தான் காலத்தில், படிப்படியாக இதனை நிறைவேற்ற முடியும். ஆனல் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு. அவர்களால் தரப்படுகின்ற ஒரு ரூபாயை கட்டணமாக வைத்துக் கொண்டு ஓரிரு ஆண்டுகளாகவே இந்தப் பரிசோதனைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, இரண்டு, மூன்று மாவட்டங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

* 87 Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of cases of leprosy detected in children at the Children's Hospital at Egmore, Madras, during 1970–71 and 1971–72; and

(*b*) the steps taken to check this infection?

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-71, 1971-72 ஆண்டுகளில் சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருந்துவமனையில் எத்தனை குழந்தைகளுக்குத் தொழுநோய் பற்றியுள்ளதெனக் கண்டறியப்பட்டது ?

(இ) இந்த நோய்த் தொற்றினைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?